பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper




# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை




சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு புரட்டாதி மீ 18 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 22 (04 - 10 - 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர் 200

மாற்று ஏற்பாடுகள் இல்லை

# கச்சேரிகளில் வைத்தே நியமனப் பத்திரம் தாக்கல்

## யாழ். கச்சேரியில் பணிபுரிய கொழும்பிலிருந்து அதிகாரிகள்

யாழ்ப்பாணம், அக்டோபர் 4

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட மாட்டாது என்றும் —

அந்தந்தக் கச்சேரிகளில் வைத்தே அவை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் —

தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா கொழும்பில் செய்தியாளரிடம் தெரிவித்ததாக இங்கு தகவல்கள் கிடைத்தன.

இதேவேளை, அரசாங்க அதிபர் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்குப் பதிலாகப் பணி புரிவதற்குக் கொழும்பில் இருந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் வந்திருப்பதாக மிக நம்பிக்கையாகத் தெரிய வந்தது

எனினும் இது குறித்துத் தமக்கு எதுவுமே தெரியாது என்று யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைப் போலவே ஏனைய கச்சேரிகளிலும் கொழும்பிலிருந்து அதிகாரிகளை வருவிக்க ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிய வரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## கச்சேரியடியில் நடந்த கிரனேட் தாக்குதல்

### பெண்மணி ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், அக். 4

யாழ் கச்சேரியடி- பழைய பூங்கா வீதியில் வீதித்தடை போடும் வேலையில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினரை நோக்கி நேற்று மாலை சுமார் 4-30 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவாவில்லை; எனினும் இச்சம்பவத்தின் போது காயமடைந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த சிவலிங்கம் கனகம்மா (45 வயது) என்ற பெண்மணி யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கச்சேரியடிப் பகுதியில் பதற்றம் நிலவியது. கண்டி வீதியூடாக பயணம் செய்த அனைத்து வாகனங்களும் வேறு பாதையூடாக யாழ் நகரை வந்தடைந்தன.

பொதுமக்களும் கச்சேரியடியால் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. (ஒ-க-9)

## வடக்கு, கிழக்கில் திருமலை, அம்பாறை மாவட்ட கச்சேரிகள் மட்டுமே இயங்கின

கொழும்பு, அக்.4

வடக்குக், கிழக்குப் பகுதிகளிலுள்ள கச்சேரிகளில் திருகோணமலை, அம்பாறை ஆகியமாவட்டங்களிலுள்ள கச்சேரிகள் மட்டுமே நேற்று இயங்கின.

பிரஸ்தாப இரண்டு மாவட்டங்களிலுமுள்ள கச்சேரிகளைத்தவிர, யாழ்ப்பாணம் உட்பட ஏனைய தமிழ்ப் பகுதிகளிலுள்ள கச்சேரிகள நேற்று இயங்கவில்லையென்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்று (3ம் திகதி) முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஐ)

முச்சந்தி முரளி



சிறிமா அம்மையாரின்ரை சந்தேகத்திலையும் ரொம்பவும் நியாயம் இருக்குமாப்போலைதான் தெரியுது...!

## 26 ரைபிள்கள் அபகரிப்பு

அம்பாறைமாவட்டத்தில் கடந்த ஞாயிறு பல வீடுகளில் இருந்து ரைபிள்கள் இனந்தெரியாத சிங்கள இளைஞர்களால் அபகரிக்கப்பட்டன

தெஹியலக்கன்டிய என்னும் கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

26 ரைபிள்கள் அப்போது அபகரிக்கப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## மாகோவில் நேற்று நால்வர் சுட்டுக்கொலை

கொழும்பு, அக் 4

மாகோவில் நேற்று நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நான்கு பேரும் காரில் வந்து கொண்டிருந்த போது இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

உயிரிழந்தவர்களில் மாகாணசபை உறுப்பினரான விஜரத்ன பண்டாவும் ஒருவர். ஐக்கிய சோஷலிச அணியைச் சேர்ந்தவர் அவர்.

மாகாண சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுகமாக இவர்கள் காரில் சென்று கொண்டிருந்தனர் அப்போது மரதகொல்ல என்னுமிடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் வழிமறிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

மாகாணசபை உறுப்பினருடன் உயிரிழந்த ஏனைய மூவரும் இன்னும் அடையாளங்காணப்படவில்லை. (ஒ-எ-ஐ)

## மட்டக்களப்பில் 25 பேர் விடுதலை

மட்டக்களப்பு அக் 4

மட்டக்களப்பு இந்தியப் படை புனர்வாழ்வு முகாமிலிருந்து அண்மையில் 25 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்

இவர்களை மட்டு பிரசைகள் குழு பொறுப்பேற்று உறவினர்களிடம் ஒப்படைத்ததாக குழுச்செயலாளர் திரு. செழியன் பேரின்பநாயகம் தெரிவித்தார். (ஒ-21

# துப்பாக்கிச் சூட்டிலிருந்து ஆணையாளர் சிவஞானம் தெய்வாதீனமாகத் தப்பினார்

## மாநகரசபை அலுவலகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் அக் 4

யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு. சி வீ. கே. சிவஞானம் நேற்று தெய்வ தீனமாக உயிர் தப்பினார்

மாநகரசபை அலுவலக அறைக்குள் புகுந்த துப்பாக்கி இளைஞர் ஒருவர் அவரை நோக்கிச் சுட்ட போதிலும், துப்பாக்கிச் சூட்டுக் காயம் எதுவும் இன்றி அவர் உயிரிபையில் தப்பினார். கீழே விழுந்ததினால் உராய்சல் காயம் மட்டுமே ஏற்பட்டதாக அறியவந்தது

நேற்று நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பிரஸ்தாப துப்பாக்கி பிரயோகச் சம்பவம் குறித்து அறியவருவதாவது:-

நேற்றுக் காலை சுமார் 11 மணி அளவில் அலுவலகத்துக்கு வந்த மூன்று இளைஞர்களில் ஒருவர் ஆணையாளரைச் சந்திக்கப் போவதாக அலுவலகத்துக்கு வெளியே நின்ற சிற்றூழியர் ஒருவரிடம் அனுமதி கோரினார். அவருடன் வந்த மற்றும் இருவர் வெளியே நின்றனர்.

அனுமதி கோரிய துப்பாக்கி இளைஞர் ஆணையாளரின் அறைக்குள் சென்றார்.

அவர் நுழைந்த சில நிமிடங்களில் ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஐந்து துப்பாகி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகச் சொல்லப்பட்டது. 'நீர் தானே சிவஞானம்?' என்று கேட்டு அவர் சுட்டதாகவும் அறியவந்தது.

துப்பாக்கிவேட்டுக்களை அடுத்து ஆணையாளர் மேசையின் கீழ் குனிந்து தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கொண்டார். துப்பாக்கிச்சூட்டுக்காயம் எதுவும் அவருக்குப் படவில்லை. பல சன்னங்கள் அவரது அறைச் சுவர்களிலேயேபட்டன. உராய்சல் காயங்கள் சிலவே அவருக்கு ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

மாநகரஆணையாளரை நோக்கிச் சுடப்பட்ட தகவல் கிடைத்ததும் மாநகர சபைக்கு விரைந்த அமைதிப்படையினர் ஆணையாளரின்

(8ஆம் பக்கம் பார்க்க),

## யாழ். நகரின் மத்தியில் நேற்று துப்பாக்கிச் சூடு

### இரண்டு இளைஞர்கள் பலி

யாழ்ப்பாணம், அக். 4

யாழ்ப்பாண நகரின் மத்தியில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு இளைஞர்கள் கொலையுண்டனர்.

நேற்றுக் காலை சுமார் பத்து முப்பது மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில், காந்தி சிலைக்குச் சமீபமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

தம்பித்துரை யூட் குலேந்திரன் (வயது 18) யாழ்ப்பாணம், செல்வராசா பாஸ்கரன் (வயது 24 ஆனைக்கோட்டை ஆகிய இரண்டு இளைஞர்களுமே துபபாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொலையுண்ட இருவரின் சடலங்களும் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டது. (ஒ-க-10 51)

## மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம். அக்.4

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி மாணவர்கள் நேற்றுத் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

விஞ்ஞானப் பிரிவு மாணவனான அரியரத்தினம் கமலாசன் என்பவர் கடந்த 28 ஆம் திகதி வீட்டில் வைத்து இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படாததை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் நியாயமாக நடத்தப்படுமா?

### இப்படிக் கேள்வி எழுப்புகிறார் சிறிமா

கொழும்பு, அக். 4

டிசம்பரில் நடைபெற விருக்கும் ஜனாதிபதித் தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்படுமா?

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மினுவாங்கொட என்னுமிடத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் மேற்கொண்ட சந்தேகத்தை எழுப்பினார்.

1977க்குப் பின்னர் நடத்தப்பட்ட அத்தனை தேர்தல்களிலும் முறைகேடுகள் இடம் பெற்றிருந்தன.

பட்டினி போக்க பிரதமர் புதிய சித்தாந்தம் ஒன்றைச் சொல்லி வருகிறார்.

மக்கள் இதனை நம்பி ஏமாந்து விடக் கூடாது.

கதிர்காமம் அழகிமனம்பேரியின் மரணம் குறித்து பிரதமர் பிரேமதாஸ முதலைக் கண்ணீர் வடித்தார்

இன்று எத்தனையோ மனம்பேரிகளை நாடு கண்டு விட்டது. அவர்களுக்கு பிரதமர் கண்ணீர் வடித்தாரா?

இப்படித் திருமதி பண்டாரநாயக்கா கேட்டார். (ஒ-எ)

### சுபநேரம்

4-10-1988
புரட்டாதி – 18
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 32 முதல் 12 02 வரை
ராகுகாலம்:
3.02 முதல் 4 32 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்
நவமி பகல் 4.36 வரை

### கொடிகாமத்திலும் நினைவுத்தூபி

12 போராளிகளினதும் நினைவாக கொடிகாமம் – கச்சாய் வீதி ஒராம் கட்டையில் நிறுவப்பட்டுள்ள நினைவுத தூபியும் நாளை மறுதினம் 6ஆம் திகதி மாலை 2 மணிக்குத் திறந்து வைக்கப்பட உள்ளது. (ஒ-9)

12 போராளிகளின் நினைவாக

# தீருவிலில் தூபியும் பூங்காவும் நாளை திறந்து வைக்கப்படும்

## வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், அக் 4

பன்னிரண்டு போராளிகளின் நினைவாக நாளை வல்வெட்டித் துறை தீருவிலில் நினைவுத் தூபியும், பூங்கா ஒன்றும் திறந்து வைக்கப்பட உள்ளன.

கடந்த வருடம் இதே தினத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் பருத்தித்துறை கடற் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் விசாரணைகளுக்காக பலாலி இராணுவ முகாமிலிருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட இருந்த வேளையில் அவர்கள் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான இவர்களது முதலாம் வருட நினைவு தினம் நாளையாகும்.

அதனை முன்னிட்டே இந்த போராளிகளைத் தகனம் செய்த தீருவில் திடலில் நினைவுத் தூபியும் சிறுவர் பூங்காவும் பலலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டு உள்ளன. பிரஸ்தாப தூபியும் பூங்காவும்நாளை 5 ஆம்திகதி திறந்து வைக்கப்பட உள்ளன.

இந்தத் திறப்பு விழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறும்

இந்த நிகழ்ச்சிகளில் சகல பொது மக்களையும்

(8ஆம் பக்கம் பார்க்க)

நட்புறவு உடன்பாடு:

## பிரேமாவின் கோரிக்கையை பரிசீலிக்க இந்தியா தயாராம்

சென்னை, அக். 4

இந்திய – சோவியக் நட்புறவு உடன்பாடு போன்று இலங்கையும் இந்தியாவும் ஒரு நட்புறவு உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் என்ற பிரதமர் பிரேமதாஸாவின் கோரிக்கையை பரிசிலனை செய்ய இந்தியா தயாராக இருக்கிறது

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

அக்டோபரில் உயிர் நீத்தவர்களின்

# தியாகத்தை அர்த்தமாக்க அமைதியைப் பேணுங்கள்

## அமைதிப படையினர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக் 4

கடந்த அக்டோபரில் உயிர் நீத்தவர்களின் தியாகத்தை அர்த்தமுள்ள தாக்குவதற்கு. அமைதியைப் பேணுமாறு இந்திய அமைதி காக்கும் படையினர் குடாநாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

யாழ்ப்பாணக் குடாநாடு. 1987 அக்டோபரில் அதற்கு முதல் எப்போதும் இல்லாதவாறு, வன்செயல்களையும், உயிரிழப்புகளையும் கண்டது.

அமைதியை நிலை நாட்ட உழைக்குமாறும், அமைதிப் பாலங்களை உருவாக்குமாறும், இந்திய அமைதி காக்கும் படை மக்களில் சகல தரப்பினரையும் வேண்டிக்கொள்கிறது.

உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதன் மூலம் மேலும் வன்செயல்களுக்குத் தூபமிடாமல், பார்த்துக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஹொண்டா C 90 (Good Condition) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: யாழ். சென்ரல் ரேடேர்ஸ் (Bata), No. 11 நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6920)

பாவித்த தளபாடங்கள், கசற் றேடியோ, Show-Case, கட்டில், மேசை, கண்ணடிமேசை, Electric Cooker, Oven, Hot Plate, மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 326, பிரதான வீதி, சென் பற்றிக் சந்தியருகில் யாழ்ப்பாணம். (6921)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printiug Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## புறொயிலர் குஞ்சு

புறொயிலர் குஞ்சுகள் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேவையான அளவு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ். பிரம்படிலேன், கொக்குவில். (7066)

திறி ஏக்கர் பாம் ஒருநாள் Hyline வெள்ளை நிறப் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து 4-30 மணிவரையும். சுஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம் (C 340)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி, விருத்து, சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (6786)

## தேவை

நகரின் மத்தியிலிருக்கும் சைவ உணவகத்திற்கும், கிறீம் கவுண்டருக்கும் காசாளர், சிப்பந்திகள், சமையற்காரர்கள் உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இல 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7070)

புறூவ் றீடர் (Proof Reader) தேவை. இருமொழிகளும் தெரிந்திருத்தல் வேண்டும். முன் அனுபவம் அவசியம். நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடன் 10-10-88க்கு முன் விண்ணப்பிக்கவும். இல 383, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (C/ 360)

பிளேட்டின் மெஷின் மைண்டர் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (C/ 359)

## Advanced English

புதியபிரிவு ஆரம்பம் 8- 10- 88 சனி, ஞாயிறு நாட்களில் காலை 8. 30 மணி - 10. 30மணி S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6863)

## அரைச்சலார்

31-10-88 வரை விசேட சலுகை. உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன் GAS நிரப்பிக் கொள்ளுங்கள். OMEGA MANIPAY ROAD, JAFFNA. (7065)

## கோழிக்குஞ்சு

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7067)

## இந்து மகளிர் கல்லூரியில் பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம் அக் 4 யாழ்ப்பாணம்-நல்லூர் வட்டார விவசாய விஞ்ஞான ஆசிரியருக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 30 முதல் மாலை 4·30 வரை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி
# அந்தியேட்டி அழைப்பிதழ்



**செ. செல்வகுமார் (ராஜா)**

அன்னை மடியில்: 11 - 01 - 1961 மண்ணின் அடியில்: 04 - 04 - 1988

தோன்றிற் புகழுடன் தோன்றுக. இதற்கமைய தோன்றியதும் புகழுடனே - உன் புகழ் கொண்ட தமிழ் உலகை விட்டதுவும் புகழுடனே அன்புச் செல்வமே! செல்வக்குமரா - நம் அனைவரையும் விட்டுப் பிரிந்திரே - உன் உடல் போனாலும் போகாது உன் புகழ். ஆறுது எம்மனம் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாமா, மாமி, அம்மா, அப்பா,
மைத்துனர், சகோதரர்,
சித்தப்பாமார், பெரியம்மா,
நண்பர்கள், உறவினர்.

கே. சபாரத்தினம்,
60, ஜமுனுவீதி.
நல்லூர். (6923)

# ஓர் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



## ஸ்ரீ கௌரி

பிறப்பு: 02. 05. 1964 இறப்பு: 17. 10. 1987

மணம் பரப்ப வேண்டிய மலராய்
மணந்து மகிழ வேண்டிய மங்கையாய்
எம் இதயத்தில் கனவை வளர்த்து நின்ருய்
ஸ்ரீ கௌரி :
நீயே கனவாகி விட்டது ஏன்?
வளம் நிறைந்த தந்தைக்கு வாரிசாக
அணைந்து நிற்கும் உறவிற்கு அன்புச் சுடராக
ஒரு கொடியில் பூத்த இருமலரில் ஒரு மலர் நீ
குழந்தை உள்ளத்தோடு
குடும்ப நிர்வாக ஆற்றலும் பெற்றனை
தந்தையின் தொழிற்பரப்பைத் தோளில் தாங்கி
அநுபவ முதிர்வும் பெற்றனை
உயரிய கல்வியோடு
வணிக மாணியும் ஆயினை
இப் பெருமைகளால் எம் எண்ணத்தில்
நிழல் தருவாக
குளிர் புனலாக
வசந்தத் தென்றலாக
மணம் பரப்பிய நீ
நெஞ்சை நெருப்பாக்கியதேன்?
உன்னை மணக்கோலத்தில் காண விரும்பினோம்
ஆனல் நீயோ.....
எமக்கு மனக்கோலம் மட்டுமே தந்து மறைந்தனை!
எம் மனதில்
உன் கோலம் என்றும் சுடர்விடும்
உன் இழப்பில் ஏங்கி நிற்கும்....

''ஸ்ரீ கௌரி வாசம்''
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

திரு. இ. சின்னத்துரை தம்பதிகள்,
பிள்ளைகள்,
பெருமகள், சிந்தியா.

05-10-88இல் வரும் அபரபட்ச தசமித் திதியில் எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் உறவினர்களையும், நண்பர்களையும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (7119)

# COMPUTER PROGRAMMING IN BASE III

பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 11 - 10 - 1988
(செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 1250/-(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**UNIKCO**
**Computer Centre**

No. 5. மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோருக்கருகாமை)
(C325)

# முதலாம் வருட நினைவஞ்சலி



**திரு. பேரம்பலம் கெங்காசிவம்**

(சுன்னுகம்) வசிப்பிடம் (சரசாலை) பிறப்பிடம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
உத்தியோகத்தர் (கிளிநொச்சி, முல்லைத்தீவு)

ஆண்டவன் படைப்பு: 14. 9. 1951 அநியாய அழிப்பு: 16. 10. 1987

திதி: 4. 10. 1988

எங்கள் அன்புத்தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம்மனது. மாறவில்லை உங்கள் நினைவு. முன்னல் வந்து முகம் பார்த்து ஆசையுடன் அப்பா என்று கூவியழைக்குமுன்பே மின்னமல் முழங்காமல் எங்களை ஏங்கவைத்த பொல்லாத ஷெல் வடிவில் வந்த காலன் இரக்கமின்றி எம்மிடமிருந்து சூறையாடி விட்டானே! அப்பா என்று சொலவதற்கே அருகதையற்று விட்டோம். உங்களைப்போல் அரவணைக்க எமக்கு இவ்வுலகில் யாருமில்லை எங்கள் அப்பாவே. என்றும் எங்கள் உள்ளத்தில் உலவி வருவீர்கள். ஓராண்டு ஓடியும் தாங்கொணுத்துயரில் மூழ்கி பேசமுடியாமல் உள்ளோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கிறோம்.

எமது துக்கத்தில்பங்குகொண்டவர்களுக்கும், வடபிராந்திய தெங்குப் பயிர்செய்கைச் சபை ஊழியர்கள் அனைவருக்கும் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி: நிர்மலா கெங்காசிவம்,
மக்கள், தாய், சகோதரங்கள்,
மாமா, மாமி, மைத்துனர்மார்.

இலங்கை வங்கி வீதி,
சுன்னுகம் தெற்கு. (C/362)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 5-1928

மறைவு: 14-10-1987

திதி: 4-10 1988



**திரு. பூ. கனகு (சினி)**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

வளை...
திருநெல்வேலி. (7125)

# பிரயாண ஒழுங்குகள்

## LIBIYA:

- QUANTITY SURVEYORS
- COMPUTER OPERATORS
- ELECTRICIANS

(VERY ATTRACTIVE SALARIES)

## சவூதி:

- பிஸ்கெற் கொம்பனி உதவியாளர்.
- மெக்கானிக் உதவியாளர்.
- ஸ்கூல் கிளினேர்ஸ்

## லெபனுன்:

- சப்பாத்துக் கொம்பனி உதவியாளர்.

குவைற், டுபாய் பாஸ்போட் தந்தவர்களும் மற்றவர்களும் காலை 10 மணிக்கு முன் சந்திக்கவும்.

**சிவா மாஸ்ரர்**
தொழில் ஆலோசகர்
ஏழாலை தெற்கு.
(7132)

# 45 ஆவது நினைவஞ்சலி



**திரு. சி. க. சந்திரன் அவர்கள்**

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எல்லோருக்கும் இனியவராய் பாரினில் யாவரும் போற்றிடும் பாங்குடன் வாழ்ந்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, லெச்சுமி, பெருமகள்
பேரன், உறவினர்கள்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை. (7122)

# ஓராண்டு நினைவு



**திரு. வ. இராசரேத்தினம்**

தோற்றம்: 02- 11- 1929 மறைவு: 17- 10- 1987

திதி: 5- 10- 1988


எங்கள் குடும்பத்தின் தலைவனுய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடன் வாழ்ந்து திடீரென எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது.

5- 10- 88 அன்று நடைபெறும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகள், பேரன்.

கோப்பாய் வடக்கு. (7123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊரெழுவில் நடைபெற்ற தியாகி திலீபனின் ஓராண்டு நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் "லெப் கேணல் திலீபன் வீதி" என்ற பெயர்ப்பலகையை தமிழ்ஈழ மக்கள் மன்றத் தலைவர் திரு. சிவானந்தசுந்தரம் திரை நீக்கம் செய்து, வீதியை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அஞ்சலியுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஜெயம்)

# ஏனைய கைதிகளும் விடுதலையானால் மட்டுமே

## எமது விடுதலையில் திருப்தி

### பூஸாவிலிருந்து விடுதலையானவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், அக். 4

பூஸாவில் தண்டிக்கப்பட்ட கைதிகளில் 42 பேரும் தண்டிக்கப்படாத கைதிகளில் 82 பேரும் உள்ளனர். இது தவிர நீர் கொழும்பு சிறைச்சாலையில் 1 பெண் அரசியல் கைதியும், மகஸீன் சிறையில் 40 க்கு மேற்பட்டவர்களும், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 க்கு மேற்பட்டோர் தடுப்பு ஆணை எதுவும் இல்லாமலே தடுத்து வைககப்பட்டுள்ளனர். அவர்களிலும் மூவர் மனநோயாளிகள். இவர்களும் விடுதலை செய்யப்பட்டாலேயே எமக்கு விடுதலையின் பூரணதிருப்தி கிடைக்கும். அவர்களின் விடுதலைக்காக விடுதலையானவர்களாகிய நாம் நடவடிக்கைகளையும் தேவைப்பட்டால் போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

பூஸாவிலிருந்து விடுதலையாகி இந்திய கப்பல் மூலம் காங்கேசன்துறை வந்த அரசியல் கைதியான எஸ். சிவகுருவராஜா மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

எஸ். விநாயகமூர்த்தி தம் அனுபவத்தை பின்வருமாறு கூறினார்:-

கடந்த 86 ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் இடம்பெற்ற பரநதன் ரயில் குண்டு வெடிப்பை அடுத்து, அப்பாவியான எனக்கு அருகே கைனேட் வில்லை ஒன்றைப் போட்டு விட்டு எனது கைனேட் என கூறி என்னை இலங்கைப்படையினர் கைது செய்தனர்.

அதன் பின் பூஸாவில் சேர்க்கப்பட்டேன். அங்கு நாம் சாப்பிட்ட நாட்களைவிட உண்ணாவிரதம் இருந்த நாட்களே அதிகம் அவ்வளவுக்கு உணவு நிலை அங்கு மிக மோசமாக இருந்தது.

அத்துடன் வைத்திய வசதிகளும் மிகவும் மட்டரகமாகவே இருந்தன. கடுமையான வியாதிகள் என்றால் என்ன சாதாரண வியாதிகள் என்றால் என்ன பனடோல் அல்லது டிஸ்பிரின் மட்டும் வழங்கப்பட்டன.

இவ்வாறு அவர் சொன்னார்.

எஸ். தயானந்தன் என்பவர் கூறியதாவது:-

பொய்த்தகவல் ஒன்றை அடுத்து கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட நான் கடந்த 20 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கரவெட்டியில் எனது தாயார் காலமாகி விட்டார். இந்திய இராணுவ பாதுகாப்புடன் குறிப்பிட்டநேரத்துக்கு மட்டும் தாயாரின் மரணச்சடங்கில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டது.

அதன்படி ஹெலிக்கொப்டர்மூலம் பூஸாவிலிருந்து பலாலிக்கு அழைத்து வரப்பட்டு இந்திய ராணுவ பாதுகாப்புடன் மரணச் சடங்கில் கலந்துவிட்டு உடனே திருப்பி அழைத்துச் செல்லப்பட்டேன், அதன் பின் இன்று விடுதலையாகி வீடு செல்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-9)

இன்னும் சில தினங்களில்

# சாவகச்சேரி இலங்கை வங்கியிலும் பணக்கொடுக்கல், வாங்கல் இடம்பெறும்

### கிளை திறப்பு விழாவில் தகவல்

சாவகச்சேரி அக் 4

இன்னும் சில தினங்களில் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையிலும் பணக்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் இடம்பெறலாம். அதற்கான முயற்சியில் வங்கி நிர்வாகம் இறங்கியுள்ளது.

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு. பி. ஜே வின்சன் இப்படிக் கூறினார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி இலங்கை வங்கி கிளையின் திறப்பு விழாவில் உதவிப் பொது முகாமையாளர் திரு வின்சன் இத்தகவலை வெளியிட்டார்.

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை பழைய கட்டிடத்திலிருந்து, புதியதோர் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு சம்பிரதாய ரீதியாக திறந்துவைக்கப்பட்டது

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு பி. ஜே வின்சன், உப முகாமையாளர் திரு எஸ் கணேசமூர்த்தி, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திரு எஸ் சண்முகலிங்கம் நகரசபை செயலாளர் திரு. ரீ நடராத்தினராஜா ஆகியோரும் மங்களவிளக்கேற்றினர்.

திரு. வின்சன் மேலும் பேசுகையில் வடபகுதி மக்களுக்கும், இலங்கை வங்கிக்கும் நிரம்பிய தொடர்பு உண்டு. இதை விரிவடையச் செய்தவர் முன்னாள் பொது முகாமையாளர் அமரர் லோகநாதன் என்றால் மிகையாகாது.

இப்படி அவர் கூறினார்.

வட பிரதேச உதவி முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி பேசுகையில், வாடிக்கையாளரின் வசதி கருதியே புதிய கட்டிடத்திற்கு இது மாற்றப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலை காரணமாக ஊழியர்கள் தமது முழுமையான சேவையை தரமுடியாதிருக்கிறது. பொது மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும் என்றார்.

கிளை உதவி முகாமையாளர் திரு. க. தவயோகம் நன்றியுரை வழங்கினார். (ஓ-31)

இன்று மாலை 3.30 மணிக்கு
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மண்டபத்தில்
"அன்பரின் அழைப்பு"
- நற்செய்தி நிகழ்ச்சி -
கிறிஸ்துவுக்காக இளைஞரின் படைப்பு
அனுமதி இலவசம
(6862)

ஆறும் ஆண்டுப்
பிரவேசப் பரீட்சை - 1989
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை
விண்ணப்ப முடிவுத் திகதி:
21- 10- 1988
பரீட்சைப் பாடங்கள்: தமிழ், கணிதம்
பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையோர்:
இவ்வருடம் ஐந்தாம் ஆண்டில் கற்கும் மாணவர்
பரீட்சைத் திகதி: 05. 11. 19-8
விண்ணப்பப் படிவம்: கல்லூரி காரியாலயத்தில் ரூபா பத்துச் (பரீட்சைச் செலவின் பொருட்டு) செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
திரு.பொ. பாலசிங்கம்
— அதிபர் —
(C/358)

# சைவக் குருமாருக்கு

## வவுனியாவில் ஏற்பட்ட சோதனை

மானிப்பாய், அக். 4

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ்ஸில் பயணம் செய்த சைவசமய குருக்கள்மாரிடமிருந்து பணம், மற்றும் மோதிரம், சங்கிலி, உருத்திராட்சமாலை போன்ற தங்க நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டன.

இச்சம்பவம் அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

அண்மையில் கண்டி ஆலயம் ஒன்றில் மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட யாழ்ப்பாண சைவக்குருமார் கொழும்பு சென்று யாழ்ப்பாணம திரும்பினர்.

வவுனியாவை அண்மித்த வேளையில் இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்கள் சிலர் அவர்கள் வந்த வானை திசை திருப்பி தனியார் வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றனராம்.

அங்கு சைவக் குருமார்களை வானைவிட்டு உடைமைகளுடன் இறங்குமாறு பணித்துவிட்டு, வானை திருப்பிச் செல்ல அனுமதித்தனராம்.

பின்னர், குருமார்களிடம் இருந்த பணம், நகைகள் முதலியவற்றை எல்லாம் பறித்துக்கொண்டு போக்குவரத்துச் செலவுக்காக அவர்களுக்கு நூறு ரூபா மட்டும் கொடுத்துவிட்டு இச்சம்பவம் பற்றி எவருக்கும் அறிவிக்கக் கூடாது என எச்சரித்து அனுப்பினராம்.

சுமார் 50,000/-ரூபா வரை தம்மிடம் கொள்ளையடிக்கப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட குருக்கள் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்,

## விற்பனவு நிலையம்

யாழ்ப்பாணம், அக் 4

யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வு நிலையங்களால் உற்பத்தி செய்யப்படும் பலவித பொருள்களை விற்பனவு செய்வதற்காக யாழ் நகரில் பிரதான வீதியில் ஒரு விற்பனவு நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தை யாழ் ஆசனக்கோவில் பங்குத் [illegible] ஜெயநேசன் அடிகளார் திறந்து வைத்தார். (இ)

# ஆசிரியர்கள் அன்றும் இன்றும்

## பிரியாவிடை வைபவத்தில் கொத்தணி அதிபர் பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், அக். 4

இன்றுள்ள இளம் ஆசிரியர்கள் லீவு பெறுவதில் கடைப்பிடிக்கும் ஏனோதானோவென்ற மனப்பான்மை ஆசிரியர்கள் சிலரின் கடமையுணர்ச்சியற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

சரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரிய மணி திரு. ஆ. சபாரத்தினத்துக்கு மேற்படி பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் அபிவிருத்திச்சங்கமும் வழங்கிய பிரியாவிடையின் போது ஊர்காவற்றுறை கொத்தணி அதிபர் திரு. எஸ்.ஏ.ஈ. இரத்தினராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது 'நாங்கள் உதவி ஆசிரியராக இருந்த காலத்தில் லீவு பெறுவதானல் முதல் நாளே 'றெக்ரர்' இடம் சென்று லீவுக்கான காரணத்தைக் கூறி லீவு பெறுவோம்.

இன்று ஆசிரியர்கள் சமீபத்திலுள்ள கபால் நிலையத்துக்குச் சென்று 'லீவு வழங்கவும்' என்று தந்தி அடித்து விட்டு நின்று விடுகின்றனர்.

இவர்கள் 'பிளீஸ்' தயவு செய்து என்ற சொல்லைக் கூடப் பாவிப்பதில்லை.

இவர்களை நினைக்க மன வேதனையாகவிருக்கிறது.

காலம்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச)

## இராமநாதன் கல்லூரி பவளவிழா

மானிப்பாய், அக் 4

உடுவில் இராமநாதன் கல்லூரியின் பவளவிழாவை அக்டோபர் மாதநடுப்பகுதியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள் ஒன்றுகூடி இவ் விழாவை இரு நாட்களுக்கு நடத்துவது எனத் தீர்மானித்துள்ளனர்.

கல்லூரி அதிபர் திருமதி குமராசாமி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

பவள விழாவை முன்னிட்டு பாடசாலையில் புதிய மண்டபம் ஒன்றை திறந்து வைக்கவும், சித்திரம், மனையியல், விவசாயம், ஹொட்டல் முகாமைத்துவம் ஆகிய பகுதிகள் அமைந்த கண்காட்சி ஒன்றை நடத்துவது எனவும் கூட்டத்தில முடிவு செய்யப்பட்டது.

விழாவை முன்னிட்டு பவளவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுளளது.

முதலாம் நாள் நிகழ்ச்சியில் 75 மரங்களை பாடசாலை வளவில் நடுவது என்றும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இப்பாடசாலையிலசேவையாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களை கௌரவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-90)

## திலீபனின் நினைவாக வாசிகசாலை

கொடிகாமம் அக் 4

மிருசுவில் அரசடியில தியாகசீலன் திலீபனின் ஞாபகமாக வாசிகசாலை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் திரு. எஸ். கே தம்பு அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் (உ-75)

## தீவுப்பகுதி பிரயாணிகள் அவதி!

குருநகர், அக். 4

தேசிய அடையாள அட்டை இல்லாத பிரயாணிகள் யாழ் பண்ணை வீதியால் செலவதற்குக் கடந்த ஒருசில தினங்களாக அனுமதிக்கப்படுவதில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதியில் இருந்து யாழ் நகருக்குள் நுழைவதற்கும், நகரில் இருந்து தீவுப்பகுதிகளுக்கு செல்வதற்கும் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத பிரயாணிகளை அமைதிப் படையினர் அனுமதிப்பதில்லையாம்.

தற்காலிக அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொள்வதாகவும் பிரயாணிகள் தெரிவித்தனர். (ஒ-51)

## ஒப்பந்தத்துக்கு முன்னால்...!

கொழும்பு, அக்.4

அமைதி ஒப்பந்தத்துக்கு முன்னால் இலங்கை எதிர்ப்புக்கொள்கையை வளர்ப்பதில் சில இந்திய ராஜதந்திரிகள் ஈடுபட்டிருந்தனர். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அந்தநிலை இல்லை.


ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன உல்லாச முகவர்கள் சங்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

இக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ஓ-எ)





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாயகத்திற்கு உயிர் தந்




## தளபதி குமரப்பா

குமரப் பா என்று சொன்னால்
கூட வரும் தனி வீரம்
அமைதி என்று வந்த பின்னர்
திருமலையின் மங்கை நல்லாள்
கைப் பிடித்த வேளை யிலே
கயவர் உனைப் பிடித்தனரோ
கொண்டு சென்ற குபபி யினால்
தன் னுயிரை நீத்து விட்ட
கொள்கையிலே குறை மிவன்
காவியயாய் மாறிவிட்டான்!



## கப்டன் ரகுவப்பா

பொலிகை பெற் றெடுத்த ரகுவப்பா
பெற்ற சாதனைகள் ஏராள மேராளம்
புலிகள் வந்து போக நல்ல வழிகாட்டி
போரில் நல்லதொரு பணியுங் கொண்டு
பாக்கு நீரிணையில் நல்ல சுழியோடி
பார்க்கு மிடமெங்கும் பரந்து நிற்பான்.



## கப்டன் நளன்

'கப்டன்' என்று நளன்
பதவி தனைப் பெற்று
தப்பு ஏது மின்றித்
தரணி வெல்ல வந்து
சின்ன வயதி லிவன்
செய்த சூரத் தனம்
பின்னை இள வயதில்
வல்ல புலி யானான்,



## மே

நீறு பூத்த நெ
நெஞ் ல் நில
பேறு பெற்ற த
பெற்ற நல்ல
கொள்கையில்
கொடு கை
சாவகச் சேரி ம
சாதனை பெற்

**"எங்கள் மரணத்தின் நிகழ்வுகள் நாங்கள் பகிர்ந்து கொண்டோம். நியாயப்படுத்த முடியாது. மக்களுக்காக, மரணித்தவர்கள் போகின்றோம். இதோ! எங்கள் சீருடைகள்... எங்கள் பா விடாதீர்கள். ஆம்!... புதிய முகங்கள்... புதி எங்கள் மரண**

**— அன்**



## இரண்டாவது லெப்டினன்ட் ஆனந்தகுமார்

லெப் டினன்ட் பதவியோடு
இனியநல் லறிவும் கொண்டாய்
தமிழகம் காக்கும் போரில்
தன்னினம் மீட்கு முன்பே
அமிழ்தென நஞ்சை உண்டு
ஐயனே காவிய மானாய்!



## லெப்டினன்ட் தவக்குமார்

புலிகள் என்ற ஆட்சியில்
புதிய வேக முள்ளவன்
பாக்கி யென்ற பேரிலே
பாது காக்க வந்தவன்
தாக்கி ஓடும் வெற்றியில்
தனக் குவமையற்றவன்!

# உறுதியின் உறைவிடம் இது!

**அன்பான தமிழீழ மக்களே!**

**"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப் பயிரைக்
கண்ணீரால் காத்தோம் – கருகத்
திருவுளமோ ?"**

இந்திய சுதந்திரப் போரில் மக்களின் மாற்றமடைந்த மனோநிலை கண்ட மகாகவி பாரதியார் வேதனையோடு பாடிய பாடல்கள் இவை.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒரு மயக்க நிலையில் விடுதலைப் புலிகளின் தியாகங்கள் மறக்கப்பட்டன: உயிர் இழப்புகள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன; மக்கள் உல்லாச வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த வேளை......

நாம் நினைப்பவை, நாம் பழகுபவர்கள் நல்லவர்கள் என்று நினைத்து ஆனந்தமான எதிர்காலத்தை எண்ணி தளபதி புலேந்திரன் தளபதி குமரப்பா மற்றும் பதினைந்து போராளிகள் கடலில் செல்ற வேளை......

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பலவந்தமாகக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்ற வேளையில் மக்களின் பலமான கண்டனங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆகியவை மத்தியிலும் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்ற வேளையில் — இந்திய அமைதிப் படையினரால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் — பதினேழு விடுதலைப் புலிகளின் முன்னணித் தலைவர்களும் சயனைட் உட்கொண்டு, அவர்களில் 12 போராளிகள் மரணித்த வரலாறு தமிழீழப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஒன்று.

அவர்களின் நினைவாக நாளை (05-10-1988-இல்) வல்வை திருவில் மைதானத்தில் — அவர்கள் அக்கினியுடன் சங்கமித்த அந்தப் புனித பூமியில் — ஒரு மகோன்னதமான நினைவாலயமும் பூங்காவும் திறந்து வைக்கப்படுகிறது.

இது தியாகத்தின் வரலாற்றைக் காவியமாக்கும் நினைவாலயம்! ஆம்!...... இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல; எங்கள் உறுதியின் உறைவிடம்.

இச் சோகவரலாற்றை கறைபடிந்த வரலாற்றை — நினைவுகூருமுகமாக இன்று இந்த விசேட சிறப்பிதழ் வெளியிடப்படுகிறது.

அன்புடன்
பிரதேச பொறுப்பாளர்
ஒருங்கிணைப்புக் குழு.

( விளம்பர அநுபந்தம் )





## கரன்

பழம் புலி யென்ற போதும்
பகுத்து நல் லறிவு கொண்டாய்
களம் பல கண்ட வீரம்
கரன் என்ற பேரில் உண்டு
உடன் சென்ற பன்னிரு புலியைக்
கொடுஞ் சிறைக் இழுத்த போது
புடம் இடும் தங்கம் போல்
புவியில் வீழ்ந் தமர ரானாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த காவிய நாயகர்கள்


**ஜ [illegible] ல்லா**

நப்பா யின்று
த்த கடற்புலி அப்துல்
லேமைக் காப்பில்
பைந்தமிழ் வீரன்
கன்று மாளுய்
[illegible] று சென்றுய்
ண்ணின்
ற வேங்கை.

**கப்டன் மிரேஸ்**

பத்துத் தடவை பாடை வராது
பதுங்கி யிருந்தால் பத்தும் வருமோ
எத்தித் திரியும் சிங்களர் ஆட்சி
எடுத்தே எறியக் "கப்டன் மிரேஸ்"
பெற்று வளர்த்த தாயை மறந்து
பெரும்-பணம் சேர்க்கும் ஆசை
மறந்து
செத்து மடிதல் ஒருமுறை யென்றே
சிரித்துக் கொண்டே புலியுடன்
சேர்ந்தாய்!

**கப்டன் பழனி**


பாரில் உன்போன்ற புலிகள் பலருமில்லை
பாழும் விதியுமுன்னை பறித்ததுவோ
சயனைட்டால்
பழனி என்றுன்னை என்று
அழைப்போமோ
பழனி உன் போன்று பாய்ந்து
வருவாரோ
கொள்கை வழி நின்று குன்றம்
உயர்ந்தோனே
உன்கொள்கையினை தொடர்வோம்.

**தளபதி புலேந்திரன்**

திருமலையின் தவப் பிறப்பு
தியாகத்தின் தனிச் சின்னம்
எரிமலையாய் கிளர்ந்தெழுந்து
இனம் காக்க மொழி காக்க
திருமலை மண் காத்து நின்றான்
தெரு வெல்லாம் அவன் நாமம்
புலி என்றால் புலேந்தி என்பர்
புவி தன்னில் களம் கொண்டார்.


. அழுவதனுல்... சோகஇசை ஒலிப்பதனுல்... எங்கள் மரணத்தை
நாங்கள். அந்த மகிழ்வுடனே நாங்கள் மெல்ல... மெல்ல...
ாதணிகள்... எங்கள் ஆயுதங்கள்... அவற்றை மரணிக்க
மக்கள் யுத்தம்... புதிய வெற்றியின் ஓசைகள்...
ணத்தைவெல்லட்டும்!"


யுடன் தளபதி குமரப்பா, தளபதி புலேந்திரன், மற்றும் 10 போராளிகள்



**இரண்டாம் லெப்டினன்ட் ரெஜினோல்ட்**

சாவிலுன் அருமை
செந்தமிழ் ரெஜியே -
[illegible] வியம் படைத்தோ
சாவை நீ சந்தித்தாய்?
[illegible] ாவிகள் பார்த்திருக்க
பதைத்து நீ வீழ்ந்தாயே
தாவிடுப இளைஞர்க்கோ
தரணியில் வழிகாட்டி!





**லெப்டினன்ட் அன்பழகன்**

புலி யோடு களம் சென்று
புலி மீது புகழ் தந்தாய்
களிப் போடு குலம் பேணக்
கொடு நஞ்சோடு புரம் சென்றாய்
அன் போடு வரும் உந்தன்
அணை யாத வொரு தீபம்
அன் பழக னுடன் நாமம்
இனிப் பாடும் ஒரு கீதம்.

கடந்த வருடம் 30 - 9 - 87 அன்று இலங்கைக்கடற்படையினால் கைது செய்யப்பட்ட 17 வீரவேங்கைகளை ஒப்பந்தத்திற்கு மாறாகக் கொழும்பு கொலைச் சிறைக்கு கொண்டு செல்ல முயற்சித்த பொழுது — இந்திய அரசினாலும் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் — தமது இயக்க மரபுக்கிணங்க — சயனைட் உட்கொண்ட நேரத்தில் மரணமடைந்த 12 போராளிகளை நினைவு கூரும் கண்கவர் நினைவுத் தூபியையும் அதனைச் சூழ்ந்திருக்கும் 12 இதழ்களும் தாமரைத் தடாகம் கொண்ட பூங்கா அமைப்பும்......... இது ஒரு நினைவாலயம் மட்டுமா? ஓர் காவியத்தின வரலாறு ......! ...... மண்மீட்புககாகத் தம்மையே அர்ப்பணித்து ஓர் இனத்தின் விடுதலைக்கு வழிகாட்டி நிற்கும் ஓர் இயக்கத்தின் வரலாறு!

நான்கு ஏக்கர் நிலப் பரப்பை உள்ளடக்கிய இந்த அமைப்பு பின்வரும் நான்கு வலயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

★ வெளிப்புறம் சூழ்ந்து நிற்கும் கண்கவர் பூங்காவும் தாமரைத் தடாகமும்.
★ மூன்று அடி உயரத்தில் அமைந்துள்ள பசும்புல் மேடை
★ நடுமையமாக உள்ள 6 அடி உயர ஒன்று கூடல்மேடை.
★ உட்புறம் ஓங்கி நிற்கும் 46 அடி உயரமான தூபியையும், 6 அடி உயரமான தாமரை இதழ்களைக் கொண்ட நினைவாலயமும்.

வல்வை மாநகருக்கு மட்டுமன்றி தமிழீழம் எங்கும் உள்ள அனைத்து மக்களும் வந்து பயன்பெறும் ஒரு நோக்கோடு அமைக்கப்பட்ட இந்த எழில் மிகு பேராலயம் பூசிக்கப்பட வேண்டியதும், போற்றப்பட வேண்டியதுமான ஒரு நினைவாலயம்.

பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த நினைவாலயம் மக்களுக்காக, மக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு கற்களும், மண் துணிக்கைகளும் ஒவ்வொரு கண்ணீர்த்துளிகள்.

விடுதலைக்காக மரணித்த வீர வேங்கைகளை, எந்த மக்களுக்காக அவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்டார்களோ, அந்த மக்களின் நெஞ்சில நிலைப்பதற்காக இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பிரமாண்டமான பணியில் பொறியியலாளர், விலை மதிப்பீட்டாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், சடற்றொழில் கிராமிய அபிவிருத்தி ஒருங்கிணைப்புச் சங்கம், வல்வை விளையாட்டுக் கழகங்கள், வர்த்தகர் சங்கங்கள், வடமராட்சி தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், கட்டட விற்பன்னர்கள், பிரசைகள் குழுக்கள், [illegible] மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் தமது பங்களிப்பை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவாலயம் அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல; ஆராதனைக்குரிய ஆலயம்; உறுதியின் உறைவிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களுக்குரிய உரிமைகள் தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

## ஒஸ்லோ நகரில் நடந்த கருத்தரங்கில் வலியுறுத்து

ஒஸ்லோ, அக். 04

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு, அங்குள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல உரிமைகளும் வழங்கப்பட்டு அவை உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் பல இனம், மதம், கலாசாரங்களைக் கொண்ட சமூகத்தினர் வசிப்பதால் அங்கு வாழும் மக்கள் யாவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படவும் பாகுபாடுகள் எதுவுமின்றி வாழவும் அரசியற் சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

நோர்வே தேசத்தின் தலைநகரான ஒஸ்லோ நகரில் போரூட் நிறுவனத்தாலும் சர்வதேச சமாதான ஆய்வு நிலையத்தாலும் ஒழுங்கு செய்யப்பட்ட 'இலங்கையில் சமாதானத்துக்கான எதிர்பார்ப்புகள்' பற்றிய இருநாள் கருத்தரங்கில் ஒருமனதான மேற்காணும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த சிங்கள பௌத்தர்கள் தமிழர்கள், ஐரோப்பியர்கள், இலத்தீன், அமெரிக்க நாட்டவர்கள், அமெரிக்கர்கள் பங்குகொண்டனர்.

கருத்தரங்கில் பங்குகொள்ள விடுதலைப் புலிப்பிரதிநிதி ஒருவர் வரவிருந்தார் என்றும் அவருக்கு உரிய நேரத்தில் பிரயாணத்துக்கான அனுமதி இடைக்கவில்லை என்றும் அக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

ரியூன் நோர்வே மேற்றிராணியார் சணர் லிஸ்லிறட் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற கருத்தரங்கில் பங்கு கொண்ட நாடுகளின் பிரதிநிதிகள் பின்வரும் விடயங்களில் ஒருமனதான முடிவுக்கு வந்தனர்.

★ இலங்கையில் பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவை விரைவில் நடத்தப்பட வேண்டும்.

அத்தேர்தல்கள் பாகுபாடற்றதும் சுயாதீனமானதாகவும் இருக்க வேண்டும்.

★ இத்தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் மாகாண சபை உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து புதிய அரசியற் சட்டங்களை வரைவதற்காக ஒரு சட்ட நிர்ணய சபையை உருவாக்க வேண்டும்.

இச் சட்ட நிர்ணய சபை இலங்கையில் ஒற்றை ஆட்சிக்குக் கீழ் வாழும் சகல இன மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

★ இலங்கை பூராக நடத்தப்படவுள்ள பொதுத் தேர்தலில் பங்கு கொள்வோர் பலாத்காரத்தையோ தீயவிளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வார்த்தைகளையோ பயன்படுத்தக் கூடாது. இதற்காகத் தேர்தலில் பங்குகொள்ளும் கட்சிகளும் தனிநபர்களும் ஒன்றுகூடி ஒரு உடன்படிக்கைக்கு வர வேண்டும்.

★ வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் பலாத்கார சம்பவங்களைக் கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ இலங்கை அரசாங்கம் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனது அதிகாரத்தைப் பாவித்து பச்சைப் புலி ஊர்காவல் படை போன்ற இராணுவ அதிகாரங்களைக் கொண்ட ஆயுதப் படைகளைக் கலைக்க வேண்டும்.

★ இலங்கையின் தென் பகுதியில் நடைபெறும் ஆட்கொலைகள் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை ஐ. நா. சபை மனித உரிமை பாதுகாப்பு நிறுவனங்கள் உடனுக்குடன் வெளிப்படுத்தவும் பொது மக்களின் கவனத்தை ஈர்க்கவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

★ இந்திய இலங்கை உடன்பாட்டுக்கு அமைய வட கிழக்கு பகுதியிலுள்ள சமூகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அக்குழு உடனடியாகப் போர் நிறுத்தத்தையும் அதன் அமுலாக்கத்தையும் மேற்பார்வை செய்யும்.

★ இலங்கையின் வடக்கு - கிழக்கு தெற்குப் பாகங்களில் மனம் போன போக்கில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதக் குழுக்களினால் கொலைகள் நடத்தப்படுகின்றன. அவைகளை நாம் கண்டிக்கிறோம்.

★ இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் அது தென் பகுதியில் ஆயுத பிணக்குகளை நிற்பாட்ட வழி வகுக்கும்.

★ இலங்கையில் திருப்திகரமான அரசியல் தீர்வு ஏற்படும் வரை வெளி நாடுகளில் அகதிகளாகவிருக்கும் இலங்கைத் தமிழ அகதிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது. (ச)



நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு 'ஷப்ரு' வினால் நடத்தப்பட்ட புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசில்கள் அண்மையில் ஷப்ரு நிதி நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டன.

போட்டியாளர் ஒருவருக்கு ஷப்ரு நிதி நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு. சி. ஸ்ரீரங்கநாதன் பரிசு வழங்குவதை மேலேயுள்ள படத்தில் காணலாம். (ஒ)

### நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் திண்டாட்டம்

நெடுந்தீவு, அக்.4

கடந்த நான்கு மாதங்களாக மூடிக்கிடக்கிறது பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் நெடுந்தீவு எரிபொருள் விநியோக முகவர் நிலையம். இதனால் முத்திரைக்கான மண்ணெண்ணெயைப்பாவனையாளர்களுக்கு வழங்க முடியாமல் திண்டாடுகிறது நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்.

தனிப்பட்ட வியாபாரிகளிடம் கூடுதல் விலை கொடுத்தே பொதுமக்கள் தமக்குத் தேவையான மண்ணெண்ணையைப் பெறவேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

### ஆண்டுக் கிருத்திய நினைவு

மண்ணில் மகிழ்ச்சி 18- 12- 1967

விண்ணில் விருந்தாக்கினர் 15- 10- 1987



திதி: 04. 10. 1988

லலிந்தி இராயரட்னம் ( லலிந்தி )

(மருத்துவ பீட அனுமதிபெற்ற யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவி )

மாதங்கள் பன்னிரண்டு சென்றாலும்
மனதில் அமைதியில்லை
வேதங்கள் கூட எங்கள்
வேதனை தீர்க்கவில்லை
மருத்துவ பீடம் செல்லப் போகிறாய்
என்றிருந்தோம்
மாறாக நடந்த கதை
மனம் சுட்டெரிக்குதையோ!
அமைதியின் பெயரைச் சொல்ல
அருகதை எமக்கில்லை
ஆறுமோ இக் கவலை
ஆத்மா சாந்திக்காக

தகவல்:
திருமதி.இ.இராசரத்தினம்
( தாய், சகோதரர்கள். )

(7120)

### திலீபனுடையது

## தியாகம் அல்ல யாகம்

காங்கேசன்துறை, அக்.4

"திலீபன் ஆற்றியது தியாகம் மட்டுமல்ல. அதற்கும்மேலாக யாகம் என்றே குறிப்பிடவேண்டும். தனது தாயகத்துக்காக, தனது மக்களுக்காக, தனது இனத்துக்காக 12 தினங்கள் அவன் நடத்திய யாகம் தமிழின விடுதலைப் பாதைக்கு புதியதோர் உத்வேகத்தையும் சக்தியையும் கொடுத்தது

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில வசந்த மண்டபத்தில் இடம்பெற்ற திலீபன் நினைவு நினைததையொட்டிய பிரார்த்தனை நிகழ்ச்சியில் பேசிய காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி உப அதிபர் பிரமஸ்ரீ து. சுந்தரமூர்த்திஐயர் மேற்கண்டவாறு கூறினர்.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக்குருக்கள் அகல் விளக்கேற்றி இந்தப் பிரார்த்தனை நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

மாவை இசைவேளாளர்களும், பொது மக்களும், மாணவ மாணவிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். (இ-68)

## இலங்கை-இந்திய ஒப்பந்தமும் காணிக் குடியேற்றக் கொள்கையும

பங்களூர் பேச்சுக்களின் போது இலங்கைத் தரப்பை இந்தியத்தரப்புக் கேட்டுக்கொண்டது மாகாணத்தில் உள்ள அரச காணிகளை அந்தந்த மாகாணங்கட்கு 99வருடகுத்தகைக்கு விடமுடியுமோ என்பதைப் பரிசிலனை செய்யும்படி. ஆனல் இதை இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்து 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் அப்பென்டிக்ஸ். 11 ல்

1· அரச காணிகள் தொடர்ந்தும் குடியரசுக்குச் சொந்தம்.

2. குடியேற்றம் தேசிய இன விகிதாசாரப்படி இடம்பெறும் என்று கொண்டு வந்துளளது இதன் பிரகாரம் வட, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் 74½ தமிழர் 12½ இஸ்லாமியர் 8 விகிதம் குடியமர்த்தப்படுவர் முடிவு கிட்டத்தட்ட அடுத்த 25 வருடங்களில் யாழ் குடாநாடு தவிர்ந்த முழு வட, கிழக்கு மாகாணமும் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசமாக மாறும்.

உரும்பராய் மக்கள் மன்றம்.

( 6884 )

### கரைச்சி தெற்கு பல நோ. கூ. சங்கம், கிளிநொச்சி

## பாவித்த லொறி உதிரிப்பாக பகிரங்க ஏல விற்பனை

எமது சங்க லொறிகளில் இருந்து பெறப்பட்ட பாவித்த உதிரிப்பாகங்கள் 11-10-88 அன்று எமது சங்க வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விபரங்கள் பார்வையிட விரும்புவோர் காரியாலய வேலை நாட்களில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் மீளளிக்க முடியாத வைப்புப்பணமாக ரூபா 25/- செலுத்தப்படவேண்டும்.

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி.

(C 361)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



திரு. தம்பையா பாலசிங்கம்
(தபால் அதிபர், மட்டக்களப்பு)

மலர்வு:- 22- 10 - 1938
மறைவு:- 16- 10 - 1987

திதி:- 4- 10- 1988

அயராது கண்ணும் கருத்துமாய் உழைத்து பாசத்துடன் எம்மை வளர்த்து தமது உயிரையும் உடலையும் எங்களுக்காக ஈந்து எம்மை வளர்த்துக்காத்திட்ட எங்கள் அருமை தந்தையே, ஓராண்டு சென்றிடினும் உங்கள் நினைவு எங்கள் உள்ளத்தினின்றும் நீங்காதையா. உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி இறைவன் அடியைப் பிரார்த்திக்கின்றோம்.

பனைவி, மக்கள், தாய், சகோதரர்கள், மாமி,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

1 ஆம், வட்டாரம்,
அனலைதீவு.

(6646)

### விண்ணக வாழ்வின்

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அன்ரனி ஜேக்கப்


மலர்வு: 19- 10- 1923
உதிர்வு: 25- 08- 1988

உமை உருக்கி எமை வளர்த்து உம்வழி எமைவிட்டு வான்வீடு சென்றனையோ நீர் உதிர்ந்து நாட்கள் பல நகர்ந்தாலும் எம் இதயத்தில் நிதம் வாழ்ந்திடுவீர்.

உமது பிரிவால் துயருறும்,
பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

உரும்பராய் கிழக்கு. (6395)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. நா. பாலசுப்பிரமணியம்
தோற்றம்: 12. 08. 1929
மறைவு: 16. 10. 1987

திருமதி. பா. நாகேஸ்வரி
தோற்றம்: 16. 08. 1940
மறைவு: 16. 10. 1987

எங்கள் அன்புத் தெய்வமே! இறந்து போனீர்களா? இல்லை. இறைவனடி சேர்ந்துவிட்டீர்களா. இல்லையில்லை இறப்பு வாழ்க்கையின் முடிவில்லை பிறந்தோர் வாழ்க்கையின் தொடக்கம் என் தெய்வமே! இறப்பின் மூலம் தான் ஒருவருடைய பெருமதி உணரப்படும். உங்கள் பெருமதியை உயிருடன் இருந்த பொழுதும் கண்டு உணர்ந்தவர்கள் இப்போது நன்றாய் உருகி விட்டோம். பன்னிரு மாதங்களாக நாம் விட்ட கண்ணீரும் இனி விடப்போகும் கண்ணீரும் உங்களுக்குரிய ஆசித் தீர்த்தங்கள் ஆகட்டும். இத் தீர்த்தக்கரையினில் உங்கள் திருமேனி பள்ளிகொள்ளட்டும். நீங்கள் எங்களுக்காக வாழ்ந்தவரே! இனி நாம் உங்களுக்காகக் கண்ணீருடன் வாழ்கின்றோம். உருகும் உள்ளங்கள் என்றும் உங்கள் நினைவில் வாழும்.

பிள்ளைகள், உறவினர்கள்.

கல்வியங் வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

( 6918 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

**பொருள்:**

கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, வேறு வேல் தேடி வருகின்றவன் தன் மார்பில் பட்டிருந்த வேலைக்கண்டு பறித்து மகிழ்கின்றான்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம். ● பெ இல. 88
04-10 1988


## தடங்கல் வேண்டாம்

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழும் இந்த நாட்டின் அரசாங்க மொழியாக வேண்டும்; உத்தியோக மொழியாக வேண்டும்.

இதற்கு வகை செய்யும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதாவது அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் இரண்டாவது ஷரத்தில் தமிழையும் உத்தியோக மொழியாக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. தமிழையும் உத்தியோக மொழியாக அமுல் செய்வதற்கான சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றும் எனவும் 13 ஆவது திருத்தத்தின் இரண்டாவது ஷரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தம் செய்யப்பட்டு பதினைந்து [illegible]கள் முற்றாகக் கடந்துவிட்டன. 13 [illegible]து திருத்தம் நிறைவேற்றப்பட்டு இந்த [illegible]தத்தோடு ஒருவருடம் பூர்த்தியாகிறது.

ஆனால், தமிழை உத்தியோக மொழியாக அமுல் செய்வதற்கான சட்டம் இன்னும் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டதால், சம்பந்தப்பட்ட சட்டத்தைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அரசு கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் தமிழையும் உத்தியோக மொழியாக்கும் சட்டத்தை எப்படி வரைவது என்பதில் சட்டவாக்க வட்டாரங்களில் தெளிவில்லாத நிலைமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அரசமைப்பின் 18 ஆவது ஷரத்து உத்தியோகமொழி பற்றிக் கூறுகிறது. அதன்கீழ் சிங்களமே நாட்டின் உத்தியோகமொழி என்று உள்[illegible].

அரசமைப்பின் 19 ஆவது ஷரத்து தேசிய மொழிகள் பற்றிக் கூறுகிறது. அதன் கீழ் சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் எனத் தெரி[illegible]ச்சப்படுகிறது.

[illegible]சியமொழி, உத்தியோக மொழி [illegible] இரண்டு நிலைப்பாடுகள் குறித்தும் [illegible] நிபுணர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டையும் அரசமைப்பில் இருக்கவிடலாமா, தேசிய மொழிகள் பகுதியை நீக்கிவிடலாமா என்பன குறித்து ஆராயப்படுகிறதாம்.

சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகள் என்ற நிலைப்பாட்டில் நின்று தமிழை உத்தியோக மொழியாக அமுல் செய்வது குறித்து ஒரு புதிய சட்டத்தை ஆக்குவதானால், அதனை எப்படிச் செய்வது என்பது குறித்தும் சட்டத்துறையினர் மத்தியில் இன்னும் தீர்க்கமான முடிவு இல்லையாம்.

இலங்கையின் இனப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுப்பதற்கு முதலில் அடித்தளமாக விளங்கியது மொழிப் பிரச்சினையே; அதுவும் 1956 இன் தனிச்சிங்களச் சட்டம் தான் [illegible]கூடிய பங்களிப்புச் செய்தது. முப்[illegible]து வருடங்கள் கடந்தும் அதற்குத் தீர்வு காண்பதற்கு வழி பிறக்காமல் இருப்பது சகல தமிழர்களுக்கும் கவலை தரும் விடயமாகும். இந்த இறுதிக் கட்டத்திலும் தடங்கல்கள் வந்து சேர்வது அல்லது சேர்க்கப்படுவது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையே வளர்க்கும்.

தமிழை உத்தியோக மொழியாக அமுல் செய்வதற்கான சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய மொழிகள் சம்பந்தமான ஷரத்தை நீக்கினால்தான் தமிழை உத்தியோக மொழியாக்கச் சட்டம் இயற்ற முடியும் என்ற அரசமைப்பு நிலைப்பாடு உருவானால், அப்படிச் செய்தாலும் பரவாயில்லை.

புதிய சட்டத்தை ஆக்குவதில் உள்ள சட்டப்பிரச்சினைகளை விரைவில் களைந்து அதனை இயற்றி நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற ஆவன செய்வது நல்லது.

## உலகின் மிகப் பெரிய அகதி முகாம்

அடிஸ் அபாபா, அக் 3
உலகில் மிகப் பெரிய அகதி முகாமில் நோயும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியாவில் [illegible]த்த அகதி முகாம் [illegible]ள்ளது. நூற்றுக்கணக்கான குடிசைகளில் [illegible]ர் 2 லட்சம் அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

வெள்ளத்தினால் பெரும்பாலான குடிசைகள் நீரில்மூழ்கிவிட்டன.

இதனால் கொலரா, மலேரியா நோய்கள் ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாக உலக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (எ)

1989 பொதுத் தேர்தலில்

# ஏழு அரசியல் கட்சிகளின் தேசிய முன்னணி இந்திரா காங்கிரஸ்கட்சியைத் தோற்கடிக்கும்

## மூத்த தலைவர் திரிபாதி கடிதம்

புதுடில்லி அக் 3
இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவராகப் பணியாற்றிய திரு கமலபதி திரிபாதி பிரதமர் ராஜீவ் காந்திக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அக்கடிதம் செய்தியாளர் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

திரு. திரிபாதி கடிதத்தில் கூறியிருப்பதாவது: 1989இல் நடக்க இருக்கும் பொதுத் தேர்தலுக்காக சில சக்திகள் 'தேசிய முன்னணி' என்ற பெயரில் ஒன்று சேர்ந்துள்ளன.

இந்த முன்னணிக்கு எதிரான கட்சிகளுடன் சேர்ந்து இந்திரா காங்கிரஸ், முன்னேற்ற தேசிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் இது மிகவும் அவசியமாகும்.

இதற்கு காங்கிரஸ் தவறினால் தேசிய முன்னணி வெற்றி பெற்றுவிடும் காங்கிரஸ் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு திரு திரிபாதி கடிதத்தில் எச்சரித்தார். (எ)

### பாகிஸ்தானில் தொடரும் வன்முறை

இஸ்லாமாபத், அக் 3
பாகிஸ்தான் நகரங்களான கராச்சி, ஹைதராபாத் ஆகிய இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன.

ஹைதராபாத்தில் மேலும் 12 பேர் உயிரிழந்தனர்.

கராச்சியில் 20 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையில் கராச்சியில் நேற்று பொதுவேலை நிறுத்தம் இடம்பெற்றது. (எ)

## கோர்ப்பச்சேவ் தலைமையிலான புதிய சோவியத் பொலிற்பீரோ

மாஸ்கோ, அக் 3
சோவியத் யூனியன் அரசுத் தலைமைபீடத்தில் கடந்தவாரம் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

புதிய பொலிற் பீரோ வருமாறு:
(பூரண உரிமைபெற்ற உறுப்பினர்கள்)

1. மிக்கெயில் கோர்ப்பச்சேவ், வயது 57—ஜனாதிபதி.
2. வாடிம் மெட்வெடெவ் வயது 59 — கொள்கை வகுப்பாளர்
3. விக்ரர் செப்ரிகோவ் வயது 62—சட்ட ஆணைக்குழு.
4. யெகோர் லிகோவிச், வயது 67 — விவசாய ஆணைக்குழு.
5. லிகர நிர்க்கோனெவ், வயது 59—பதவி கொடுக்கப்படவில்லை.
6. நிக்கோலாய் ரிய்ஸ்கோவ், வயது 59—பிரதமர்.
7. விளாடிமிர் ஷெபிற்ஸ்கி வயது 70— உக்ரெய்ன் கட்சித்தலைவர்.
8. எட்வர்ட் ஷெவர்ட்நாட்ஸே, வயது 59—வெளியுறவு அமைச்சர்.
9. நிகொலாய் சிலன்கோவ் வயது 59—சமூக பொருளாதார ஆணைக் குழுததலைவர்.
10. விட்டாலி வொரொற்நிக்கோவ் வயது 62— சோவியத் சம்மேளனப் பிரதமர்.
11. அலெக்ஸாண்டர் யாகோவ்லெவ், வயது 64. சர்வதேச ஆணைக் குழுக்தலைவர்.
12. லெவ் ஸெயிகோவ், வயது 65 — மாஸ்கோ நகரக்கட்சித் தலைவர்.

வாக்குரிமையற்ற எட்டு உறுப்பினர்களும் பொலிற் பீரோவில் உள்ளனர்.

மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் தலைமையில் 10 பேர் கொண்ட மத்திய செயற்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. (எ)

## சோவியத் தலைமைப் பீடத்தில் கே.ஜி.பி. தலைவருக்கு இடமில்லை

சோவியத் அரசுத் தலைமைப்பீடத்தில், உளவு ஸ்தாபனமான கேஜிபித் தலைவர் இனி இடம் பெறமாட்டார்.

இதுவரை காலமும் கேஜிபித் தலைவர் அரசுத் தலைமை பீடமான பொலிற்பீரோவில் இடம்பெற்று இருந்தார்.

இதன்மூலம் ஆட்சி நிர்வாகத்தில் முக்கிய [illegible] பங்கு பெற்றிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத் தீர்மானத்தின்படி, கேஜிபி தலைவரான விக்டோர் செப்ரிக்கோப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருக்கு உதவியாக இருந்த ஒரு [illegible] தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் புதியவர் பொலிற்பீரோவில் இடம்பெறவில்லை.

ஜனாதிபதியாக ஒருமுறை பதவிவகித்த திரு அந்திரப்போவ் கேஜிபித் தலைவர் என்ற தனது [illegible]காரணத்தினால் பொலிற்பீரோவில் இருந்து பின்னர் ஆட்சிக்கு வந்தார். (எ)

## இன்றைக் மீண்டும் தெரிவானார்

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தலைவராக திரு. நீல்கின்னொக் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கு தொண்ணூறு சதவீதமான வாக்குகள் கிடைத்தன.

இவருடன் இடதுசாரிக் கொள்கையை தீவிரமாக ஆதரிக்கும் திரு டோனி பென் போட்டியிட்டார்.

தொழிற்கட்சி வருடாந்த மாநாடு பிளாக்பூலில் நடைபெற்றது. (எ)

## பாகிஸ்தான் அரசியல் நெருக்கடி தவிர்ப்பு

இஸ்லாமபாத், அக் 3
பாகிஸ்தானில் உருவான அரசியல் நெருக்கடி தவிர்க்கப்பட்டது.

அதிபர் ஸியா-உல்-ஹக் இறப்பதற்கு முன்னர் பாகிஸ்தான் நாடாளுமன்றம், மாகாண சட்ட சபைகளைக் கலைத்திருந்தார்.

இது சட்டவிரோத நடவடிக்கை என்று லாகூர் உயர்நீதிமன்றம் கடந்தவாரம் தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை கூட்டப் போவதாக அதன்சபாநாயகர் அறிவித்தார்.

அப்படிக் கூட்டுவதற்குப் பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்தது. (எ)

வெளி உலகில்

## ஆர்மேனியாவில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ, அக் 3
சோவியத் யூனியனின் மாநிலமான ஆர்மேனியாவின் தலைநகர் யெரவானில் நேற்று 25 ஆயிரத்துக்கு அதிகமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது ஒரு சட்டவிரோதமான ஊர்வலம், கூட்டம் என்று மாஸ்கோ அரசு தெரிவித்தது.

அஸர்பைஜான் மாநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள நெகோர்னோ—கரபாக் பகுதியை ஆர்மேனியாவுடன் சேர்க்கும்படி கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (எ)

ஈ.பி.ஆர்.எல்.எப். தெரிவிக்கிறது

# மன்னார்ப் பகுதி குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும்

மன்னார் அக் 4
மன்னார் பிரதேச குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஈ.பி.ஆர்.எல்.எப். விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
மன்னார் பகுதியில் தற்போது நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு நாம் தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இவ்விடயம் தொடர்பாக இதனுடன் தொடர்புடைய அரச நிர்வாகங்களுடன் தொடர்புகொண்டு சில உடனடித் தீர்வுகள் மேற்கொள்ளப் படஉள்ளன.

அந்த வகையில் ஐக்கிய நாட்டு அகதிகள் உயர்ஸ்தானிகர்களின் உதவியுடன் மன்னார்ப் பகுதியில் பத்து குடிதண்ணீர் தொட்டிகள் உடனடியாக அமைக்கப் படவுள்ளன.

இவை தற்போது குழாய்க் குடிதண்ணீர் வசதியில்லாத மன்னார்ப் பகுதியிலும், குழாய்க் குடிதண்ணீர் வசதியிருந்தும் பாதியளவு தண்ணீர் கிடைக்காத பகுதியிலும் உடனடியாக அமைக்கப்படும்.

இத்தொட்டிகளுக்கு பவுஸர் மூலம் நீர் வழங்கப்படும்.

எனவே மன்னார்ப் பகுதியில் அத்தியவசியமான தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட வேண்டிய இடங்களின் விவரத்தையும்—

தொட்டிகளுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரை சரியான முறையில் அவ்வப்பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் அதை நிர்வகிப்பதற்கும் அப்பகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவின் பெயர் விவரத்தையும்—

உடனடியாக எமது மன்னார் அலுவலகத்தில் கையளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இக்கடமையை அத்தியாவசியமாக குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட வேண்டிய இடங்களில் உள்ள சனசமூக நிலைய நிர்வாகிகளோ அல்லது ஏனைய பொதுநல ஸ்தாபன நிர்வாகிகளோ அல்லது எதுவும் இல்லையெனில் அப்பகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களோ உடனடியாக மேற்கொள்ளலாம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### வாரிவளவில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம்

காரைநகர், அக் 4
உயிர்த்தியாகம் செய்த 12 போராளிகளின் ஞாபகார்த்தமாக நாளை 5ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணி அளவில் காரைநகர் வாரிவளவு சற்பக விநாயகர் ஆலய முன்றலில் மாபெரும் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறுகிறது.

காரைநகர் பிரசைகள் குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

காரைநகர் பாடசாலைகள், சங்கங்கள், சபைகள், அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்த அஞ்சலிக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ)

### ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு அக் 4
தொலைத்தொடர்பு சேவையைத் தனியார் மயமாக்கும் திட்டத்தை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்திருப்பதாக கூறப்படுகின்றது.

தனியார் மயப்படுத்தும் திட்டம் பற்றிய சட்ட மூலத்தை சகல தொழிற்சங்கங்களும் விரிவாக ஆராயும் வரை தனியார் நிறுவனத்திடம் தொலைத் தொடர்பு சேவையை கையளிப்பது பின்போடப்படும் என்று ஜனாதிபதி, தன்னைச் சந்தித்த [illegible] நிறுவனங்களிடம் தெரிவித்தார். (ஒ-எ)

### முடியாத காரியம் என்று அறிவிப்பு

கொழும்பு அக் 4
இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது முடியாத காரியம் என்று நிதி அமைச்சு அதிகாரிகள் நிதி அமைச்சருக்கு அறிவித்துவிட்டனர். (இ-எ)

### ஆத்ம சாந்திப் பூஜை

வட்டக்கச்சி அக் 4
மறைந்த தியாகச் சுடர் திலீபனின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு ஆத்ம சாந்திப் பூஜையும் அன்னதானமும் சடந்த திங்கட்கிழமை உருத்திரபுரம் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றன. (ச-ரி)

### சங்காபிஷேகம்

காங்கேசன்துறை அக் 4
கெல்லிப்பளை கிழக்கு காளியப்பாள் ஆலயத்தில் மண்டல பூர்த்தி சங்காபிஷேக விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது (இ-68)

ஆசிரியர்களுக்கான

## உள்ளூர் இடமாற்ற விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், அக் 4
ஆசிரியர்களுக்கான 1989 ஆம் ஆண்டு உள்ளூர் இடமாற்றங்களுக்கானவதற்காக விண்ணப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதிவரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

இவர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1989 ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றங்கள் வழங்கப்படும்.

இப்பகுதி போன்ற [illegible] ஆரம்ப[illegible]ங்கள் — ஆரம்பக் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் புதிய நியமனம் வழங்கப்பட்டதும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-க)

### ஐ. தே. க. நிதி சேர்க்கிறது

கொழும்பு அக் 4
ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் நிதி சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

கட்சி நபர்கள், ஸ்தாபனங்களிடமிருந்து நிதி சேகரிக்கப்படுவதாக கட்சித் தலைவர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார். (எ)

# "வெலிஓயாவைப் போய்ப்பாருங்கள்"

## லலித் சொன்னது

யாழ்ப்பாணம், அக் 4
"ஒரு இலட்சமா என்று எனக்குத் தெரியவில்லை அந்த மாதிரிச் சொன்னேனா என்று நாங்கள் செய்த வேலையைப் பார்க்க வேண்டுமானால் தயவுசெய்து வெலிஓயாவைப் போய்ப் பார்த்தால் அது தெரியும். அதற்குப் பின்பு இந்தக் கேள்வியை என்னிடம் கேளுங்கள்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி 25-9-88 "ஸ்ரீலங்காதீப" பத்திரிகையின் 'மக்கள் மேடை"ப் பகுதியில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு மேற்கண்டவாறு பதில் அளித்துள்ளார்.

திருகோணமலை, டி. ஜே டபிள்யூ ஜயசூரியா, பெலியத்த, சமன்மலி தல்பதாது, அககுறஸ்ஸ, பி. எஸ் எச் பதிராஜ, ஹக்மன, சமஜிப விக்கிரமாராச்சி ஆகியோர் கேட்ட கேள்விகளுக்கே இந்தப் பதில் அளித்துள்ளார்.

கேள்விகள்:-

(1) ஒருமுறை நீங்கள் வடக்கில் ஒரு லட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்தப் போவதாகச் சொன்னது எங்களுக்கு நினைவிருக்கிறது அதைப்பற்றி இன்று என்ன சொல்கிறீர்கள்?

(2) தேசிய பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் வடக்கு - கிழக்கைக் சுற்றிவளைத்துள்ள இந்தியப் படையினர் உங்கள் கட்டளைகளை ஏற்பார்களா? அப்படி இல்லையென்றால் தேசிய பாதுகாப்பு அமைச்சர் நிலையை அவமதிப்பதாக இல்லையா?

லலித் அளித்த பதில் வருமாறு:-
"என்னுடைய கட்டளைகளை அவர்கள் ஏற்பதில்லை. தேசிய பாதுகாப்பு அமைச்சில் அன்றிருந்த அதிகாரங்களையும், இன்றுள்ள நிலைமையையும் பார்த்தால் அவமதிப்பா இல்லையா என்பதைப்பற்றி எவரும் தீர்மானம் எடுக்கக் கூடியதாக இருக்கும்.

இருந்தாலும் என்னுடைய நிலைப்பாடு இந்த நாட்டுக்கு அந்நியப் படை வருதல் சந்தோஷப்படக்கூடிய ஒன்றல்ல என்பதே.

வடமராட்சி வெற்றிக்குப் பின்பு விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு வரும்படி ஏற்றிருந்தால் இன்று நாம் எல்லோரும் அந்நிய படையின்றியே இந்த நாட்டைக் காப்பாற்றியிருக்க முடியும். இருந்தாலும் எங்கள் விருப்பு வெறுப்பு என்னவாக இருந்தாலும் இன்று அந்நியப் படை நாட்டில் உள்ளது".

(இப்படி லலித் அத்துலத்முதலி பதில் அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியிணை இயந்திரங்கள்

ஜோன்சன்

எவன்றூட் (10H.P.)

நிதான விலையில்

25,500/-ற்கு வாங்க

சென். அன்ரனீஸ்

63, யூதாததேயு கோவில் வீதி,

பாஷையூர்,

யாழ்ப்பாணம்.



# உதயன்

04 - 10 - 1988 செவ்வாய்க்கிழமை



வடபகுதி கடற்றெழிலாளர் கவனத்திற்கு!

எம்மிடம்

ஜோன்சன், எவன்றூட்

வெளியிணை இயந்திரங்களையும்,

வலை, நூல், போயா

போன்ற கடற்றொழில் உபகரணங்களையும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சென். அன்ரனீஸ்

40, கடற்கரை வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்.



## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

கரணவாய் தெற்கு ஜனசக்தி இலவசக் கல்வி நிலைய அபிவிருத்தி நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்.

1ஆம் பரிசு இல: 1119
2ஆம் பரிசு இல: 254
3ஆம் பரிசு இல: 05
4ஆம் பரிசு இல; 2756
5ஆம் பரிசு இல; 509

ஆறுதல் பரிசு இல.

1911, 2840, 2810, 655, 565

மேற்படி நிகழ்ச்சிகள் நிலையத் தலைவர் இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கரவெட்டி, உதவி அரசாங்க அதிபர் இ. ஜயாத்துரை கலந்து கொண்டார். கிராமசேவையாளர் சு. செல்வநாதன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் க. இரத்தினம் ஆகியோர் உரையாற்றினர். ந. மகாலிங்கம் நன்றியுரை வழங்கினார்.

(7131) நிர்வாகிகள்



## காணிகள் விற்பனை

I. மானிப்பாய், யாழ்ப்பாணம் வீதியில் சுழுாவடியில் (ஆனைக்கோட்டை) 5 பரப்புக் காணியுடன் ஒரு மேல்மாடி (நவீன மயமானது) வீடும், சாதாரண வீடும் சகல பிரயோசனங்கள் வசதிகள் கொண்டது. (Dr.பொன்னம்பலத்தினுடையது)

II. நவாலி சோமசுந்தரப் புலவர் வீதியில் சோமசுந்தரப் புலவர் வீட்டின் அருகில் 5 பரப்புக் காணியுடன் புத்தம் புதிய வீடும் கிணறும் பிரயோசனங்களும் உள்ளது.

III. நவாலி வீதியில் மணிமண்டபச் சந்திக்கு அருகில் வீட்டுடன் 2 பரப்புக் காணியும் கிணறும் உள்ளது.

IV. தாவடி பத்திரகாளி அம்மன்கோயிலுக்கு அருகில் (மானிப்பாய் தாவடி றோட்டிலிருந்து 200 யார்) 19½ பரப்புக் காணியும் வற்றாத கிணறும், புதிய வீடும்.

மேலதிக விபரங்களுக்கு:

தொடர்பு:

K. S. முத்துலிங்கம்,

Royal Land Commission Agency,

Regd- 160174

ROYAL INSTITUTE

NAVALY.

(சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி)

(C/364)


யாழ் பல்கலைக்கழக

## விஞ்ஞான பட்டமாணி பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், அக் 4

யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் (தாவரவியல்) விசேஷ பட்டமாணிப் பரீட்சையில் (1987) சித்தியடைந்தோர் விவரம் வருமாறு.–

முதலாம் வகுப்பு:–

செல்வி. வி. ஜெயராணி.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு):–

எஸ். கணேஷன், செல்வி. எஸ். நிர்மலா, செல்வி. பி. சொர்ணதேவி, செல்வி யூ. இராமச்சந்திரன், வி. திவ்வியநாதன், செல்வி வி. சீதாலெட்சுமி.

சாதாரண சித்தி:-

செல்வி. ஏ. கோமதி.

தாவரவியலுக்கான மூத்ததம்பி சுவாமிநாதன் புலமைப் பரிசில் செல்வி. வி. ஜெயராணிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ)

மயிலிட்டிச் சம்பவம்:

## வீட்டிலிருந்து இழுத்து வந்து சுட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், அக் 4

கடந்த முதலாம் திகதி இரவு மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானவர் மயிலிட்டி கண்ணகி அம்பாள் ஆலய பரிபாலன சபை உறுப்பினரும் கடற்றொழிலாளர் சங்க முன்னாள் தலைவருமான வைத்திலிங்கம் பரமநாதன் [சோதி] என அறிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் இரவு 10.45 மணியளவில் இவரது வீட்டிற்கு வந்த கோஷ்டி ஒன்று அவரை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றதாக அவரது மரணம் சம்பந்தமாக மயிலிட்டி வள்ளுவர் அறிவகமும் கண்ணகி படிப்பகமும் சனசமூக நிலையமும் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கடந்த 2 ஆம் திகதி மயிலிட்டி மக்கள் ஆர்ப்பாட்டமும், வீதி மறிப்பும் மேற் கொண்டனர்—

இந்தப் போராட்டத்தை அடுத்து அங்கு வந்த அமைதிப்படையினர் இந்த சம்பவத்திற்காக இறந்தவரது குடும்பத்தவரிடத்திலும். பொதுமக்களிடமும் வருத்தம் தெரிவித்தனர் என்றும்—

இவ்வாறான சம்பவங்கள் இனித்தொடராது; இந்த சம்பவம் பற்றி உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்ததை அடுத்தே வீதி மறிப்பு கைவிடப்பட்டது என்றும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது

இந்தக் கொலைச் சம்பவம் கோஷ்டி மோதல் எதனதும் விளைவு அல்ல எனவும் அந்த அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-9)

### மட்டுநகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம். அக் 4

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளித்துவிட்டு ஜனநாயக வழிக்குத்திரும்ப வேண்டும்.

மேற்படி கோரிக்கை அடங்கிய சுவரொட்டிகளை மட்டக்களப்பில் ஈ. பி. ஆர், எல். எப் ஒட்டியுள்ளது. (ஒ-21)

### பிரேமாவின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

நட்புறவு உடன்படிக்கை பற்றி கடந்த நவம்பரில் புதுடில்லி வந்தபோது ஜனாதிபதி ஜெயவர்த்தனா தான் முதன்முதலாகஇந்தியப் பிரதமருடன் பேசினார்.

அப்போதும் இந்தியா அக்கோரிக்கை பற்றி பரிசீலிக்கத் தயாராக இருந்தது.

பின்னர் இலங்கை தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டது. தற்போதைக்கு அந்த விஷயத்தை ஒத்திப் போடும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியாவைக் கேட்டுக்கொண்டார்.

இப்படி திரு. டிக்ஸிற் சொன்னார்என்று 'இந்து' மேலும் தெரிவித்தது. (ஒ-எ)

### தியாகத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வோமாக.

ஆனால் அமைதியை நிலைநாட்டுவதன் மூலம் உயிர் நீத்தவர்களின் தியாகத்தை அர்த்தமுள்ளதாக்குவோம். என்று கூறப்பட்டுள்ளது. (அ)

### மாணவர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சேபித்தே மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் இறங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட மாணவன் விடுதலை செய்யப்படும்வரை மாணவர் பகிஷ்கரிப்புத் தொடரும் என மாணவப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

### பல்கலைக் கழக பதில் பதிவாளர்

யாழ் பல்கலைக் கழகத்தின் பதில் பதிவாளராக திருமதி எம். பாலகிருஷ்ணர் நியமிக்கப்பட்டிருக்கிறார்,

பிரஸ்தாப பல்கலைக் கழகத்தின் பதிவாளராக இருந்த திரு. வி, என். சிவராஜா மூன்று மாதகால லீவில் சென்றிருப்பதனால் இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ)

### துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறையைச் சோதனையிட்டனர்.

அப்பொழுது அங்கிருந்து மூன்று வெற்றுத் தோட்டாக்களை படையினர் மீட்டெடுத்ததாக அறியப்படுகிறது.

ஆணையாளரின் அறைக்குள் ஐந்து துப்பாக்கிச்சூட்டு அடையாளங்கள் காணப்பட்டன.

மூன்று சூடுகள் சுவரிலும் இரண்டு சூடுகள் அவரது மேசையிலும் விழுந்ததாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மாநகரசபை உத்தியோகத்தர்கள் ஒரு சிலர் அமைதிப் படையினரின் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். ஊழியர்கள் வரவு பதியப்படும் இடாப்பு அமைதிப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இதனிடையே ஆணையாளர் இச்சம்பவம் குறித்து அமைதிப்படையினருக்கு முறையீடு செய்துள்ளார் எனவும் அறியவந்தது.

ஆணையாளரின் வீட்டிலும் இந்தியப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

#### வெளிநடப்பு

ஆணையாளர் சுடப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து மாநகர ஊழியர்கள் அனைவரும் நேற்று 2 30 மணியில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதேவேளை 24 மணி நேரத்துக்குள் ஆணையாளர் சுடப்பட்டதற்கான காரணம் தெரியப்படுத்தப்படவேண்டும் என்றும்சுட்டவர்கள்தம்மை அடையாளம் காட்ட வேண்டும்என்றும் இல்லையேல் மின்சாரம் நீர் விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகளைச் செய்யாமல் இருப்பது குறித்து நேற்று ஊழியர்கள் நடத்திய கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (அ-10-க)

### கச்சேரிகளில்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வதற்கான முதல் நாள் நேற்றாகும்.

எனினும் எந்தக் கட்சியும் தங்கள் வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்யவில்லை.

மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கொழும்பில் தாக்கல் செய்ய முடியாது. அந்தந்த தேர்தல் மாவட்டங்களில்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் வேட்பு மனுக்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை, கட்சி அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர், செயலாளர், ஒப்பமிட்டு ஒரே படிவத்தில் பட்டியலை ஒருவர் மூலம் சமர்ப்பிக்கலாம்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை கட்சி தலைமையகத்தினால் அங்கீகாரம் பெற்ற ஒருவரும் பட்டியலைத் தங்கள் மாவட்டங்களில் சமர்ப்பிக்கலாம்.

இதேவேளை—

வடக்கு - கிழக்கு மாகாண தேர்தல் இடாப்பு வேலைகள் (திருமலை, அம்பாறை தவிர) வெளிமாவட்டக் கச்சேரிகளில் நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது. (அ-9-21)

### தீருவிலில், ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தென்மராட்சி பகுதி எங்கும் கறுப்புக்கொடிகளைக் கட்டி துக்கம் அனுஷ்டிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தீருவில் செல்வதற்கான வாகனவசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளையில் நாளைய விழாவில் தென்மராட்சி மாணவர்களையும் மக்களையும் கலந்து கொள்ளும்படி தென்மராட்சி பிரசைகள் குழுவும், தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதனை முன்னிட்டு தென்மராட்சி மினிபஸ் சங்கத்தினரை இலவச சேவையை நடத்துமாறும் தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஒ-9-160)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தர் நாகமுத்து

தோற்றம்: 1897 மறைவு: 1987

எங்கள் அன்புத் தெய்வமே!

தாங்கள் சிவபதமடைந்து ஓராண்டு நிறைவுபெறும் இந்நேரத்தில், தங்கள்ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து அஞ்சலி செய்து ஆசி பெறும் மக்கள்

அன்னம்மா, நல்லபிள்ளை.

'முத்தகம்'

காரைநகர்-மத்தி,

காரைநகர். (7129)


## மரண அறிவித்தல்கள்

### பூதத்தம்பி இராஜேந்திரா

இல. 120, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திரு.கதிர்காமர் பூதத்தம்பியினதும் திருமதி தங்கரட்ணம் பூதத்தம்பியினது இளையபுத்திரரான திரு. இராஜேந்திரா அவர்கள் 02–10–88 அன்று காலமானார். இவர் பூதத்தம்பி தில்லைநாதன், காலம் சென்ற பொறியியலாளர் பூதத்தம்பி விஸ்வநாதன், இளைப்பாறிய காணி அலுவலக உத்தியோகத்தர் திரு. பூதத்தம்பி இராசநாதன் ஆகியோரின் இளைய சகோதரருமாவார்.

திருமதி இராஜநாதன் தங்கரட்ணம் அவர்களின் மைத்துனரும் திரு. கதிர்காமநாதம் (லண்டன்), திருமதி. இரஜினி நித்தியானந்தன் (கனடா), செல்வி காமினி, செல்வி நில்மினி, செல்வன் லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் சிறியதகப்பனுமாவார்.

அன்னாரின ஈமக்கிரியைகள் 03–10–88 திங்கட்கிழமை 3.00 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெற்றுப் பூதவுடல் கண்ணுடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

பூ. இராசநாதன்

120. நுணுவில் கிழக்கு

கண்டி வீதி,

சாவகச்சேரி. (6927)

### M. ஜேக்கப்

M. ஜேக்கப் (இளைப்பாறிய ஆசிரியர் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி, முன்னாள் யாழ். மாநகர முதல்வர்) அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் லூடுவிக்கா லூட்ஸ் (இளைப்பாறிய கைப்பணி ஆசிரியை, கோப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும் J. J. L. மனோகரன் (பொபி)(அவுஸ்திரேலியா), திருமதி மொயிரு பிலிப்ஸ், திருமதி மாறி பத்திநாதர் (சிம்பாவே), திருமதி மேரி பாலேந்திரா (அவுஸ்திரேலியா), J. தயாபரன் (குவைத்) ஆகியோரின் அன்புத் தந்தையும் டாக்டர் J. P. C. பிலிப்ஸ், திருமதி மொனிக்கா மனோகரன், L. பத்திநாதர், S. பாலேந்திரா, திருமதி பேபி தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி எலிசபெத் டேவிட், காலஞ்சென்ற திருமதி பொன்னுக்கண்டு லாசறஸ், காலஞ் சென்ற திருமதி அன்னம்மா சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற M. K. மரியதாசன்' M. L குணசிங்கம், திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. ஜோசப் பிரான்சிஸ், வண பிதா ஜோன் பிரான்சிஸ் (பங்குத்தந்தை புனித அந்தோனியார் ஆலயம், பஷையூர்) காலஞ் சென்ற மத்தியூஸ் பிரான்சிஸ் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 4-10-1988 செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின்னர் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

12, கதீட்ரல் வீதி,

யாழ்ப்பாணம். (6931)


## ★ நன்றி கூறுகின்றோம் ★



27 - 08 - 1988 அன்று நடைபெற்ற

எமது திருமண விழா வைபவத்தின் போதும், 14 - 09 - 1988

ஹோட்டல் றண்முத்துவில் (Hotel Ranmuthu)

நடைபெற்ற இராப்போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பித்த தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், பத்திரிகையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பண்ணையாளர்கள், ஊழியர்கள், வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள் அனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தனித்தனியே நன்றி கூற இயலாமைக்கு மிக மனம் வருந்துகின்றோம்.

ஈஸ்வரராஜா சந்திராதேவி தம்பதிகள்

(சற்குணராஜா & பிறதர்ஸ்)

பிரம்படி லேன்,

கொக்குவில்.

58, Ratnakara Place,

DEHIWELA.

(7126)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04–10–1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 4th October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org